


Acetylcholinesterase. தேடிப்பாருங்கள். ஏதாவது ரெண்டு மூணு இங்கிலீஷ் எழுத்துகள் மிச்சம் இருந்துவிடப் போகிறது. இது ஓர் என்ஸைம். மனித உடம்புக்குள் இருக்கின்ற நரம்புகள் சரிவர இயங்க வேண்டுமென்றால், இந்த என்ஸைம் சரியான அளவில் சுரந்தாக வேண்டும். நமக்கென்ன தெரியும்? எம்.பி.பி.எஸ்.ஸுக்கு மேலே எக்கச்சக்கமாகப் படித்துத் தொலைத்த டாக்டர்கள் கண்டுபிடித்து எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த என்ஸைம் சரியாகச் சுரக்காமல் போக அதிகம் வாய்ப்பில்லை. நரம்பு மண்டலத்தையே நேரடியாகத் தாக்கி, பெரிய அளவில் பாதிப்பு உண்டாக்கக்கூடியதாக ஏதாவது வந்து தொலைந்தால்தான் உண்டு.

அப்படியொரு பாதிப்புதான் அன்றைய தேதியில் டோக்கியோ நகரத்து மக்களுக்கு ஏற்பட்டது. ஓம் ஷின்ரிக்கியோ குண்டர்கள் காற்றில் கலந்துவிட்ட உயிர்க்கொல்லி ஆயுதத்தின் பெயர் ஸெரீன். சென்ற அத்தியாயத்தின் தலைப்பிலேயே பார்த்துவிட்டோமல்லவா? எனவே, மேல் விவரங்கள் ஏதும் இங்கே வேண்டாம்.

இந்த ஸெரீன் என்ன செய்யும் என்றால், சுவாசித்த மறுவினாடியே நேரே மண்டைக்குப் போய் நரம்பு மண்டலத்தின் மையத்தைத் தொட்டுவிடும். எம்.ஜி.ஆர். தொட்டால், பூ மலரும். இந்த ஸெரீன் தொட்டால், நரம்புகள் படுத்துவிடும். நரம்பு மண்டலம் இயங்குவதற்கு மிக அத்தியாவசியமான, முதல் வரியில் பார்த்த அந்த என்ஸைம் சுரப்பது குறைந்துவிடும் என்பதுதான் விஷயம்.

அன்றைய தினம் வாந்தி, பேதி, தலைவலி, கண் எரிச்சல், நரம்புத் தளர்ச்சி, பேச்சு மூச்சில்லாமல் போதல் என்று பல்வேறு உபாதைகளுக்கு ஆட்பட்டு ஆஸ்பத்திரிகளில் அடைக்கலமான டோக்கியோ நகரவாசிகளைப் பரீட்சை செய்து பார்த்த டாக்டர்களுக்கு மிகுந்த ஆச்சர்யம். அத்தனை பேருக்கும் ஒரே விதமான பாதிப்பு. அவர்களுக்கு என்ன தெரியும், இது தீவிரவாதத் தாக்குதல் என்று?

தவிரவும் அன்றைய சூழலில் ஜப்பானுக்கு ஜென்ம விரோதிகள் என்று யாரும் கிடையாது. அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.கூட அக்கம்பக்கத்து தேசங்களில்தான் மூக்கையும் முழங்காலையும் நுழைத்துக் கொண்டிருந்ததே தவிர, ஜப்பான் விஷயத்தில் யாருக்கும் அத்தனை பெரிய வன்மம் இல்லை. அட, மேட் இன் ஜப்பான் போடாத பொருள்களை அமெரிக்கர்களே வாங்கத் தயங்கிய காலம் அல்லவா? மேலும், நிஜமாகவே ஓர் அமைதிப்பூங்கா தேசம் அது. உழைப்பு, உழைப்பு, உழைப்பைத் தவிர வேறெதையும் சிந்திக்காத மக்கள். உழைக்கிற மக்களுக்கு உதவி செய்வதைத் தவிர, வேறொன்றையும் சிந்திக்காத அரசு.

அப்படிப்பட்ட தேசத்தில்தான் நமது மகரிஷி ஷோகோ அவதரித்திருந்தார். அழிவின் கடவுள் அல்லது அழிவின் சாத்தான்.



தாக்குதலில் ஈடுபட்ட ஓம் இயக்கத்தவர்களில் மூவர்,...

அது நிற்க. டாக்டர்கள் பரிசோதனையில் என்னவோ விபரீத கெமிக்கல் என்று கண்டுபிடித்து விட்டார்கள். ஆனால் என்ன, எங்கே, எப்படி என்கிற கேள்விகளுக்கு பதிலில்லை. இத்தனைக்கும் ஒரு குளத்தின் நீரை எடுத்துப் பரிசோதித்துப் பார்த்ததில், அதில் செரீன் கலந்திருந்தது ஆதாரபூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. எப்படி இது இங்கே வந்திருக்கும் என்றுதான் அப்போதும் சிந்தித்தார்களே தவிர, இது ஒரு தாக்குதலாக இருக்கும் என்று யாருக்குமே தோன்றவில்லை.

கவலையுற்ற அரசாங்கம், தனது சுகாதாரத்துறை அமைச்சகத்தை விளித்து, இன்னும் சிறப்பாக சுகாதார ஏற்பாடுகளைச் செய்யுங்கள். ஊரில் அசுத்தம் அதிகரித்துவிட்டது. கெட்ட வாயுக்கள் கலக்கின்றன. அழுகிய பொருள்களைத் தேங்க விடாதீர்கள். குப்பைகளை உடனுக்குடன் அகற்ற ஏற்பாடு செய்யுங்கள் என்று அக்கறையுடன் அட்வைஸ் செய்தது.
அது ஒரு தாக்குதல் என்றே யாருக்கும் தோன்றவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் சில மீடியாக்காரர்களுக்குத் தோன்றியபோது, எந்தத் தீவிரவாத இயக்கமும் இதற்குப் பொறுப்பேற்கவில்லையே என்று சொல்லிவிட்டார்கள். கொல்லும் தீவிரவாதிகளைக் காட்டிலும் கொள்கைத் தீவிரவாதிகளை அந்த விஷயத்தில் நம்பலாம். சொல்லிவிட்டுச் செய்வார்கள். அல்லது செய்தது தாங்கள்தான் என்றால், அதனை வெளிப்படுத்தத் தயங்கமாட்டார்கள்.

இதையெல்லாம் பார்த்து ஷோகோ அசஹாரா சிரித்துக்கொண்டிருந்தார். அது ஒரு வெற்றி. மிகப்பெரிய வெற்றி. மொத்தம் அறுநூறு பேருக்குமேல் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிந்தன. ஊர் முழுக்க அல்லோலகல்லோலம். எங்கு திரும்பினாலும் இதுவே பேச்சு. ஆனால் என்ன காரணம், யார் செய்தது? என்று ஒருத்தருக்கும் தெரியவில்லை.

இதுதானே வேண்டும்? இதே முறையில் ஒட்டுமொத்த ஜப்பானையும் அழிப்பது படு சுலபம். கெக்கலிகொட்டிச் சிரித்தார் ஷோகோ. உண்மையில் அந்தத் தாக்குதலின் இலக்கு, டோக்கியோ நகரம் அல்ல. நகரத்தில் குடியிருந்த மூன்று நீதிபதிகளைக் காலி பண்ணுவது மட்டுமே. ஓம் இயக்கத்துக்கு விரோதமான சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவிருந்த நீதிபதிகள் அவர்கள். கரெக்டாக அவர்கள் குடியிருந்த பகுதிக்கு அருகேதான் விஷவாயு பரவவிடப்பட்டது.

ஆனால் அதிர்ஷ்டக்காற்று, உண்மையிலேயே காற்று வடிவில் அந்த நீதிபதிகளின் வீட்டுக்கு எதிர்த்திசையில் அடித்தது. பரவவிடப்பட்ட விஷவாயு வேறு திசைக்குத் திரும்பி வேறு அறுநூறு பேரைப் பதம் பார்த்துவிட்டது!

இதுதான். இவ்வளவுதான். இதனையே ஆரம்பமாக வைத்துக் கொள்ளலாம். அடுத்த தாக்குதல்களை உடனுக்குடன் திட்டமிடுவோம் என்று ஷோகோ சொன்னார். உடனடியாக ஜப்பானில் தாக்கப்பட வேண்டிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. முக்கியமாக அரண்மனை வளாகம். அங்கே மன்னர் என்பவர் கடவுளுக்குச் சமானம். அவருக்கு எதாவது ஒன்றென்றால் மக்கள் கதறிவிடுவார்கள். கண்டிப்பாக ஒரு தாக்குதல் அரண்மனை வளாகத்தில் நிகழ்த்தியே ஆகவேண்டும் என்று தளபதிகள் அடித்துச் சொன்னார்கள்.

ஏற்கெனவே முயற்சி செய்து தோற்ற திட்டம்தான். ஷோகோவுக்கு அதில் அபிப்பிராய பேதம் ஏதுமில்லை. கண்டிப்பாக அரண்மனை தாக்கப்படவேண்டியதுதான். மன்னருக்கு மரணம் சம்பவிக்கவேண்டியதுதான். அப்போதுதானே அவர் மன்னராக முடியும்?

அதுசரி, தான் பதவிக்கு வந்ததும் மன்னராகப் பொறுப்பேற்பதா? பிரதமராகவா? அல்லது அதிபராகவா?

ம்ஹூம். மூன்றுமில்லை. கடவுளாக! ஜப்பானின் கடவுளாகத் தன்னைப் பதவிப் பிரமாணம் செய்துவைக்கும் காட்சி அவர் மனக்கண்ணில் ஓடியது. பரவசமாக இருந்தது. எத்தனை வருடத் தவத்துக்குப் பிறகு சித்தித்திருக்கும் வெற்றி! வெற்றிகூட கைக்கு வந்துவிடவில்லை. கண்ணுக்கெட்டும் தூரத்தில் இருக்கிறது. ஒரு ஹை ஜம்ப். பிடித்துவிடலாம்.

ஷோகோ தனது விஞ்ஞானிகளையும் தளபதிகளையும் அமைச்சரவை சகாக்களையும் அழைத்துப் பேசினார். ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் இருக்கிற சௌகரியம். ஒரு டிரக் அல்லது வேன் போதும். ஜன்னல் வழியே அப்படியே ஸ்பிரே பண்ணிக்கொண்டு போய்விடலாம். ஒருத்தருக்கும் தெரியாது. வழக்கு வம்பு என்று ஏதும் வர வாய்ப்பே இல்லை. அப்படியே மோப்பம் பிடித்து போலீஸ் வந்தாலும் ஆசிரமத்துப் புல்வெளியில் உட்காரவைத்து ஆசிர்வாதம் பண்ணி அனுப்பிவிடலாம். மீறி ரெய்டு, சோதனை என்று எகிறினாலும் கைக்கு எதுவும் சிக்கப் போவதில்லை.

ஏனெனில், ஷோகோவின் ரசாயன ஆய்வுச் சாலைகளும் உயிரியல் ஆய்வுச் சாலைகளும் டோக்கியோவுக்கு வெகு தொலைவில் ஒரு மலைப் பகுதியில் அல்லவா இருக்கின்றன? அதுவும் அதிகாரபூர்வமாக ஏதேதோ மருந்துப் பொருள் தயாரிக்கும் நிறுவனமாக, பினாமி பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆய்வுக்கூடங்கள். ஒரு பயல் நுழைந்துவிட முடியாது!

அது மட்டுமல்லாமல், ஷோகோ அப்போது மிகத் தீவிரமாக அணு ஆயுதத் தயாரிப்பு முஸ்தீபுகளிலும் இறங்கியிருந்தார். இந்த விஷயத்தில் அவர் ரஷ்யாவை அதிகம் நம்பவில்லை. வட கொரியாவிலிருந்தும் இரானிலிருந்தும் தனக்குத் தேவையான தொழில்நுட்பங்களை அவர் தருவிக்க முயற்சிகள் மேற்கொண்டிருந்தார். ஓரளவு அதில் வெற்றியும் கண்டிருந்தார் என்று சொல்ல வேண்டும்.

ஜப்பானில் அல்லாமல், ஆஸ்திரேலியாவில் நிலம் வாங்கி பண்ணை அமைத்து, பண்ணை வீடு கட்டி, அண்டர் கிரவுண்டில் ஆய்வுச்சாலை ஒன்றை நிறுவியிருந்தார். வட கொரியாவிலிருந்து ஆயுதத் தயாரிப்புக்குத் தேவையான கருவிகள், இயந்திரங்கள், ஆட்கள் கப்பல் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டார்கள்.
ஓர் அணு உலை அமைப்பதுதான் அவருக்குச் சவாலாக இருந்தது. சரியான தொழில்நுட்பம் வசப்படவில்லை. மூலப்பொருள்கள் கூட கள்ள மார்க்கெட்டில் கிடைத்துவிடும் என்று தெரிந்தது. சூடான் அல்லது இரானிலிருந்து தருவித்துவிட முடியும் என்பதில் அவருக்கு அபார நம்பிக்கை இருந்தது.

ஆனால், தகுந்த விஞ்ஞானிகள் கிடைப்பதில் சிக்கல் இருந்தது. பணத்துக்கு ஆசைப்பட்டு வருகிறவர்கள் எல்லாம் பத்தாங்கிளாஸில் நாலு முறை கோட்டடித்த ஆசாமிகளாக இருந்தார்கள். அல்லது பணம் கொடுத்து பாஸ் பண்ணிய விஞ்ஞானிகளாக இருந்தார்கள். எப்படியும் நான்கைந்து வருடங்களுக்குள் தன்னால் ஓர் அணு ஆயுதம் தயாரித்துவிட முடியும் என்று அவர் நம்பினார். மனப்பூர்வமாக. மிகவும் ஆழமாக. அந்த நம்பிக்கையைத் தனது விஞ்ஞானிகளிடம் பதியவைப்பதற்காகப் பல மணிநேரம் அவர்களுடன் உட்கார்ந்து பேசினார்.

‘என்ன செலவானாலும் பரவாயில்லை. எங்கிருந்தாவது தகுந்த ஆட்களைக் கொண்டு வாருங்கள். உலகம் அழியப்போகிறது என்பதில் சந்தேகமில்லை. ஜப்பான் உள்பட உலகில் ஒரு தேசமும் உருப்படியாக இருக்கப் போவதில்லை. மிஞ்சியிருக்கப்போவது நானும் என்னைச் சார்ந்தவர்களும் மட்டுமே. நமது எதிரிகளிடமிருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ள நமக்குக் கண்டிப்பாக ஆயுதங்கள் அவசியம். ஆண்டவன் நம் பக்கம் இருப்பது உண்மைதான். ஆனால், அவனேகூட ஆயுதம் இல்லாமல் இருப்பதில்லை. நமசிவாய வாழ்க. நாதன் தாளும் அவன் புள்ளையாண்டான் கையில் இருக்கும் வேலும் வாழ்க.’

இவ்வாறெல்லாம் பேசி விவாதித்த பொழுது போக, மிச்சமிருந்த நேரத்தில் அடுத்த கட்ட அழிவு நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் விவாதிக்காமல் இல்லை.

முந்தைய தாக்குதல் நடந்து முடிந்து சரியாக ஒன்பது மாதங்கள் ஆகியிருந்தன. அது ஒரு தாக்குதல் என்றே யாருக்கும் தெரியாத நிலையில், இம்முறை இன்னும் கவனமாக, இன்னும் உற்சாகமாக, இன்னும் தீவிரமான தாக்குதலுக்குத் திட்டமிட்டார்கள்.

அன்றைக்கு மார்ச் 20, 1995. அதே செரீன். அதே நபர்கள். டோக்கியோ நகரச் சுரங்கச் சாலை வழியில் ஐந்து கார்களில் செரீன் அடைத்த பைகளை எடுத்துச் சென்றார்கள். ஒவ்வொரு காரையும் ஒவ்வொரு இடத்தில் நிறுத்திவிட்டு, ஆளுக்கொரு சிரெஞ்ச் எடுத்து பையில் ஒரு குத்து. புஸ்ஸ்ஸ்ஸ் என்று வாயு வெளியேறத் தொடங்கிய கணத்தில், கள்ளர்கள் காரைவிட்டு இறங்கிக் காணாமல் போய்விட்டார்கள்.

கார்கள் முழுதும் வாயு நிரம்பியிருந்தது. எப்போது யார் திறந்தாலும் அடுத்த கணம் மோட்சம் நிச்சயம். அப்படியே யாரும் திறக்காது போனாலும் சிறிது சிறிதாக அது வெளியேறிவிடும் வகையில், கார் கண்ணாடியை ஒரு துளி இறக்கிவிட்டுத்தான் போயிருந்தார்கள்.

மிகக் கொடூரமான அந்தச் சம்பவம் அன்று அரங்கேறியது. கார்கள் ஏன் நிற்கின்றன என்று தெரியாமல் அருகே வந்து கூடி நின்று பேசிய அத்தனை பேரும் சுவாசப் பிரச்னை ஏற்பட்டு பொத் பொத்தென்று கீழே விழுந்தார்கள். அவர்கள் ஏன் விழுகிறார்கள் என்று தெரியாமல், என்னவோ ஏதோவென்று ஓடிவந்தவர்கள் அத்தனை பேரும் வாந்தி பேதியில் விழுந்தார்கள். காரைத் திறக்க முயன்றவர்கள் உடனடியாக செத்து விழுந்தார்கள். திறந்துவிட்ட கார், மொத்தம் ஐயாயிரம் பேரை மிகக் கொடூரமான தாக்குதலுக்கு உள்ளாக்கி, சின்னாபின்னப் படுத்திவிட்டது.

ஒரு மணி நேரத்துக்குள் நடந்துவிட்ட அசம்பாவிதம். டோக்கியோ முழுதும் விஷவாயுவின் வேகத்திலேயே செய்தியும் பரவி மக்கள் கடும் பீதிக்கு ஆளானார்கள். பரவிவிட்ட வாயுவை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் அதிகாரிகள் விழி பிதுங்கி நின்றார்கள். காவல்துறையினர் ஒரு பக்கம் ஊரை அடைத்து, யாரும் வெளியே போக முடியாமல் பரிசோதனை என்கிற பெயரில் படுத்த, கலவரம் மற்றும் பதற்றத்திலேயே பலபேர் மயக்கமடைந்து கீழே விழுந்தார்கள்.

விபத்தல்ல. கண்டிப்பாக இது திட்டமிட்டுப் பரப்பப்பட்ட விஷவாயு என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. அதே செரீன். அன்றைக்கு ஒரு குளத்தில் சாம்பிள் எடுக்கப்பட்ட நீரில் கலந்திருந்த அதே விஷம். எனவே, இது யாரோ செய்கிற வேலை. என்ன காரணத்துக்காகச் செய்கிறார்கள்? எத்தனை பேர்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்? விஷவாயு ஸ்டாக் எவ்வளவு வைத்திருப்பார்கள்? அடுத்த இலக்கு என்னவாக இருக்கும்?

காவல் துறை மிகத் தீவிரமாக விசாரணையை முடுக்கிவிட்டது. அப்போதும் அவர்களுக்கு ஓம் ஷின்ரிக்கியோ மீது சந்தேகம் வரவில்லை. ஜப்பானுக்கு ஏதோ போதாதகாலம் என்கிற அளவில் கவலைப்பட்டுவிட்டு, பல காவல்துறை உயரதிகாரிகளே ஷோகோவிடம் வந்து ஆசியும் ஆறுதலும் பெற்றுச் சென்றார்கள்.

ஷோகோ பரமானந்தமாக இருந்தார். அடுத்தடுத்த இரண்டு வெற்றிகள் அவரை திக்குமுக்காட வைத்திருந்தன. அடுத்தது என்ன என்று யோசிக்கத் தொடங்கியிருந்தார்.

ஆனால், அவருக்கு அப்போது தெரியாது. காவல்துறையினர்தான் கோயிந்துகளாக இருந்தார்களே தவிர, ஜப்பானிய உளவு அமைப்பில் ஒரு சில அதிகாரிகளும் சில ஊழியர்களும் மிகத் தீவிரமாக ஓம் ஷின்ரிக்கியோவையும் அதன் செயல்பாடுகளையும் கவனித்து வரத் தொடங்கியிருந்தார்கள் என்பது.